திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின்
செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திருமதி.மு.ராணி.,

ந.க.எண் :1489/2021/ஊ.வ.1 நாள் :06.07.2021.

பொருள் : பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை - திண்டுக்கல் மாவட்டம் - ஊராட்சி செயலர்களுக்கு 2019-2020 ஆம் ஆண்டு - காலிப்பணியிடங்களில் 20 சதவீத இடஒதுக்கீடு - தேர்வாணையத்தின் இசைவு பெறப்பட்டது இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை:

1. சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடித ந.க.எண்:4913/சிடி-அ2/2020, நாள்:17.12.2020
2. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் கடிதம் (2ப) எண்.74, நாள்:31.12.2020
3. திண்டுக்கல் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்:1489/2021/ஊ.வ.1, நாள்:23.01.2021
4. சார்நிலை அலுவலர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள முன்மொழிவுகள்
5. தனியர்களின் பணிப்பதிவேடுகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

---

ஆணை:

திண்டுக்கல் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகில் 2019-2020 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை II இல் உள்ள மொத்தம் கணக்கிடப்பட்ட காலிப்பணியிடங்களில் ஊராட்சி செயலர்களுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீடு அடிப்படையில் 6 ஊராட்சி செயலர்களுக்கு பணிமாற்றத்தின் மூலம் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்க, 1954ம் ஆண்டைய தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளின், ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ், பார்வை(1)இன்படி தேர்வாணையம் தனது இசைவினை தெரிவித்துள்ளதாக, பார்வை(2)இல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அரசு கடிதத்தின் அடிப்படையில் தேர்வாணையம் இசைவு வழங்கிய 6 ஊராட்சி செயலர்களுக்கு பணிமாற்றத்தின் மூலம் இளநிலை உதவியாளர் பணிநிலையில் பார்வை(3)இல் காணும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்டு திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணிபுரிந்து வருகின்றனர்.

பார்வை(4) இல் காணும் சார்நிலை அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் தனியர்களின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | அலுவலர் பெயர், பதவி / அலுவலகம், (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளர் நிலையில் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1 | ஏ.மகேந்திரன், காசாளர், ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி. | 23.01.2021 பிற்பகல் |
| 2 | மா.முத்துவேல், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், வேடசந்தூர் | 23.01.2021 முற்பகல் |
| 3 | டி.கலைச்செல்வன், காசாளர், ஊராட்சி ஒன்றியம், பழனி. | 23.01.2021 முற்பகல் |
| 4 | எம்.முருகன், காசாளர், ஊராட்சி ஒன்றியம், திண்டுக்கல். | 23.01.2021 பிற்பகல் |
| 5 | எம்.முத்து, ஊர்நல அலுவலர் நிலை-II, ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர். | 23.01.2021 பிற்பகல் |
| 6 | த.முருகன், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், கொடைக்கானல் | 23.01.2021 பிற்பகல் |

தனியர்களின் பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து 3 ஆண்டுகள் பணிக்காலத்தில் 2 ஆண்டுகள் தொடர் பணிக்காலம் தகுதிகாண் பருவ காலமாக கருதப்படும். தகுதிகாண் பருவ காலத்திற்குள் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியை முடித்திட வேண்டும். தகுதிகாண்பருவம் நிறைவு செய்வதற்கான தகுதிகளை 5 ஆண்டுகளுக்குள் பெறவில்லையெனில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்று அளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திண்டுக்கல்.

6/7/21

பெறுநர் :-
தொடர்புடையோர் (உரிய வழிமுறையாக)

நகல் :-

1. வட்டார வளர்ச்சி அலுவலர்கள்(வ.ஊ / கி.ஊ), திண்டுக்கல், ஆத்தூர்,பழனி,கொடைக்கானல், தொப்பம்பட்டி மற்றும் வேடசந்தூர்.
2. ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு